27-9-2025 Nagercoil www.dinakaran.com

தினகரன்

DINAKARAN No.1 நாளிதழ்

## நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில்

# தேசிய ஆயுர்வேத தின கொண்டாட்டம்

**நாகர்கோவில், செப். 27:** மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில், நாட்டு நலப்பணி திட்டம் மற்றும் மரியா ஆயுர்வேத மருத்துவ கல்லூரி இணைந்து, பத்தாவது தேசிய ஆயுர்வேத தினம் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் மருத்துவ முகாம், யோகா நிகழ்வு, மூலிகை செடிகள் வழங்குதல், மருத்துவ விழிப்புணர்வு உரை மற்றும் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

விழாவில் கல்லூரி பொறுப்பு முதல்வர் முனைவர் பிஜி தலைமையுரை ஆற்றினார். நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் முனைவர் ஜோஸ் பால் அனைவரையும் வரவேற்றார். மரியா ஆயுர்வேத மருத்துவ கல்லூரி மருத்துவ அதிகாரி மருத்துவர் ரூபின் மேரி மற்றும் மருத்துவர் சிந்து ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

கல்லூரியின் துணை முதல்வர் அருண் வாழ்த்துரை வழங்கினார். யோகா நிகழ்வு, தன்னார்வலர்களால் நடத்தப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கு மூலிகை செடிகள் வழங்கப்பட்டது. முடிவில் திட்ட அலுவலர் முனைவர் செஜின் நன்றி கூறினார். விழாவிற்கான ஏற்பாடுகளை நாட்டு நலப்பணி திட்ட அலுவலர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் செய்திருந்தனர்.




▸ நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கு மூலிகை செடிகள் வழங்கப்பட்டது.